Registered as a Newspaper

விக்ஞ டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட்.
யாழ்நகர்
கணிதம்: திரு. T. தயாபரன்
விஞ்ஞானம்: திரு J R. குரி
ஆங்கிலம்: திரு. S.விஸ்வநாதன்
தமிழ் ) சமயம் ) திரு. K. திருப்பதி
வர்த்தகம் ) சமூகக்கல்வி ) திரு. R.கருணாகரன்
O/L வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறும் ஒரே நிறுவனம்

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விக்ஞ டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்நகர்,
O/L, 9, 8, 7, 6
DAY CLASSES
(2 30, 8.30 - 1.30)
(கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ தை மீ 9 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 21 (22-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 48

★ யாழ். நகர் நேற்றுப் பிற்பகல் அதிர்ந்தது!
★ அடுத்தடுத்து 20 தடவைகள் ஷெல் அடி!!

# முஸ்லிம் தாயும் மகளும் உட்பட ஐவர் மாண்டனர்

## மக்கள் சிதறி அல்லோலம்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜனவரி 22

**கோட்டை முகாம் சிப்பாய்கள் யாழ்நகரை நோக்கி நேற்று நண்பகல் நடத்திய பயங்கர ஷெல் தாக்குதலில் முஸ்லிம் பெண்மணியும் அவரது மகளும் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர். 25க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.**

**பல கடைகள், வீடுகள், வாகனங்கள் ஷெல்லுக்கு இலக்காகிச் சேதமடைந்தன.**

நேற்றுப் பகல் சுமார் 2-40 மணியளவில் நகரில் மக்கள் நடமாட்டம் நிறைந்திருந்தவேளையில் கொட்டடிப் பகுதியை நோக்கி முதலில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதன் பின்னர் யாழ் பஸ்நிலையம், பாய்க்கடை ஆகிய பகுதிகளை நோக்கி தாக்குதல் நடந்தது.

அடுத்தடுத்து விழுந்த சுமார் 20 ஷெல் குண்டுகள் நகர் அதிரும் வண்ணம் வெடித்துச் சிதறின

நாவாந்துறைப் பகுதியில் வீடொன்றினுள் விழுந்து வெடித்த ஷெல் குண்டினால் வீட்டுக்குள் இருந்த 70 வயது முஸ்லிம் பெண்ணும், அவரது 43 வயது மகளும் உடல் சிதறி உயிரிழந்தனர்.

ஆஸ்பத்திரி வீதியில் ஒளவையார் சிலைக்கு அருகில் விழுந்து வெடித்த ஷெல் குண்டுக்கு பேரின்பநாயகம் என்பவர் பலியானார்.

வாழைப்பழக் கடைப் பகுதியில் விழுந்துவெடித்த மற்றொரு ஷெல் கதிரவேலு இரத்தின சபாபதியின் உயிரைக் குடித்தது.

மரக்கறிக் கடைப் பகுதியில் விழுந்த ஷெல் குண்டினால் இளையதம்பி சந்தையா என்பவர் படுகாயமுற்றார் அவர் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

ஷெல் குண்டுத்தாக்குதலினால் நேற்று நண்பகல் நகர் அல்லோலகல்லோலப்பட்டது. மக்கள் பீதியில் நகரை விட்டு ஓடி மறைந்தனர். நகர் வெறிச் சோடியது.

ஷெல் தாக்குதலினால் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பல கடைகளும் கொட்டடி, நாவாந்துறைப் பகுதியில் உள்ள பல வீடுகளும் சேதமடைந்தன. (உ-10)

### காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம், ஜன. 22

நேற்றைய 'ஷெல்' தாக்குதலில் காயமடைந்தோர் சிலரின் விவரம்:—

சுப்பிரமணியம் செல்வரத்தினம் (40 வயது)— அல்லைப் பிட்டி, முத்தையா சிவசுப்பிரமணியம் (25 வயது) - அல்லைப் பிட்டி, சின்னராசா இரட்ணகோபால் (23 வயது) - சித்தன்கேணி, முகமட் மக்பூல் (36 வயது) -சோனகத்தெரு, எஸ். செல்வரத்தினம் (40 வயது) - மண்கும்பான், தம்பிமுத்து சிறிபால் (22 வயது)- சண்டிலிப்பாய்,

### 107 லொறிகள் வரை நேற்று ஆனையிறவு முகாமைக் கடந்து வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 22

கடந்த சில தினங்களாக ஆனையிறவு தடை முகாமில் தரித்து நின்ற நூற்றுக்கணக்கான லொறிகளில் 107 லொறிகள் நேற்றுக் குடாநாட்டுக்குள் வர அனுமதி வழங்கப்பட்டது.

வடபிராந்தியலொறிப் போக்குவரத்துச் சங்கத்தினர் பலாலி இராணுவ முகாம் பிரிகேடியருடனும் ஆனையிறவு முகாம் உயரதிகாரிகளுடனும் பேச்சு நடத்தியதன் பயனாகவே லொறிகள் விடுவிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு இராணுவ முகாம் உயரதிகாரி நேரடியாக தடைவாசலுக்கு வந்து சகல லொறிகளையும் பார்வையிட்டதன் பின்னர் குடாநாட்டுக்குள் லொறிகள் தொடர்ந்து செல்ல அனுமதி அளித்தார்.

நேற்று மாலையில் இந்த லொறிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன, (இ-10)

### இறந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 22

நேற்றைய ஷெல் தாக்குதலில் பலியான அப்பாவி மக்கள் ஐந்துபேரின் விவரம் வருமாறு:

1. மீரா சாகிப் மீரா மொகைதீன்நாசகியாத், (70 வயது) அபூபக்கர் றோட் சோனகதெரு, (தாய்),

2. முகமது யாசிம் தாகிரா [43 வயது) அபூபக்கர் றோட் சோனக தெரு, (மகள்)

இவர்கள் இருவரும் நாவாந்துறைப் பகுதியில் உள்ள தமது வீட்டில் இருக்கையிலேயே ஷெல் குண்டுக்கு இரையானார்கள்.

3 கந்தையா இளையதம்பி (75 வயது) புங்குடுதீவைச் சேர்ந்த இவர் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுவருபவர்.

4. கதிரவேலு இரட்ண சபாபதி - (33வயது) இவரும் மரக்கறி வியாபாரம் செய்துவருபவர்.

5 எஸ். பேரின்பநாயகம் (35 வயது). (இ-10)

### வயிறு பிளந்த நிலையில் மரணமானவர்

யாழ்ப்பாணம், ஜன. 22

முதல் ஷெல் விழுந்து காயப்பட்டவரை தூக்கி வந்தபோது அடுத்த ஷெல்லும் விழுந்தது காயப்பட்டவருக்கு அருகில் நின்ற ஒருவர் வயிறு பிளந்த நிலையில் அந்த இடத்திலேயே மரணமானார்.

நேற்று மரக்கறிக் கடைக்குள் விழுந்த ஷெல் குண்டினால் காயமடைந்த கதிர்காமு மோகனசுந்தரம் (20 வயது) இவ்வாறு சொன்னார்.

இவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது

இவர் மேலும் சொன்னதாவது:

நேற்றுப் பகல் இரண்டு மணி அளவில் கோட்டைப் பகுதியில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அப்பொழுது மரக்கறிக் கடைக்குள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சைரன்ஸ் சத்தம் கேட்டு கீழே விழுந்து படுத்தவரும் காயம்

சைரன் சத்தத்தைக் கேட்டு ஷெல் அடிக்கப்போகிறார்கள் என நினைத்து நிலத்தில் விழுந்து படுத்தபோது ஷெல் குண்டு விழுந்து வெடித்தது

இதனால் எனக்குக் காயங்கள் ஏற்பட்டன.

நேற்று மரக்கறிக் கடைக்குள் விழுந்த ஷெல் குண்டினால் காயமடைந்த சு. செல்வரத்தினம் மேற்கண்டவாறு சொன்னார்.

நேற்று நடைபெற்ற தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை அடுத்து மரக்கறிக் கடைக்குள் நின்ற அனைவரும் நிலத்தில் விழுந்து படுத்தனர்.

இதனை அடுத்து நானும் நிலத்தில் படுத்துக்கொண்டேன்.

திடீரென சைக்கிள் பாதுகாப்பு நிலையப் பக்கம் விழுந்து வெடித்த ஷெல் குண்டின் சிதறல்கள் என்னையும் தாக்கின.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

## மேலும் 100 தமிழர்களை சுவிஸ் திருப்பி அனுப்பும்

பேர்ன், ஜன 22

மேலும் நூறு தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப சுவிட்சர்லாந்து அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அரசியல் தஞ்சம்கோரி சமர்ப்பிக்கப்பட்ட இவர்களின் மனுக்களை சுவிட்சர்லாந்து அரச அதிகாரிகள் நிராகரித்து விட்டனர்.

ஏற்கனவே 40 தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

தமிழ் அகதிகளை இலங்கைக்குத்திருப்பி அனுப்ப வேண்டாம் என்று ஐ நா. அகதிகள் ஆணைக் குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை ஸ்தாபனம், உலக கிறிஸ்தவத் திருச்சபை உட்பட பல முன்னணி ஸ்தாபனங்கள் விடுத்த கோரிக்கையை சுவிஸ்அரசு நிராகரித்துவிட்டது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

### லஞ்சம் கொடுக்க வேண்டாம் என்கிறது லொறிப் போக்குவரத்து சங்கம்

யாழ்ப்பாணம் ஜன 22

சோதனைக்காகலொறிகள் நிறுத்தப்படும் போது எவருக்கும் லஞ்சம் கொடுக்கக் கூடாது.

கொடுப்பது கண்டு பிடிக்கப்பட்டால் கடும் தண்டனை வழங்கப்படும்.

வடபிராந்தியலொறிப் போக்குவரத்துச் சங்கத்தினர் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

லஞ்சம் கொடுப்பதாலேயே பல லொறிகள் கிழமைக் கணக்காக முகாம்களில் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பொதுமக்களேபெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இச் சங்கம் அறிவித்துள்ளது.

### அடகுத் தாய் !

நாக்பூர், ஜன. 22

மகளின் திருமணத்துக்குப்பட்ட கடனுக்காக தாய் மூன்று ஆண்டுகளுக்கு அடகு வைக்கப்பட்டாள்.

அடகு பிடிப்பவர் ஒருவர் தாயை ஈடு பிடித்தார்.

இச்சம்பவம் மகராஷ்டிர மாநிலத்தில் பீட் மாவட்டத்தில் உள்ள விதா என்னும் கிராமத்தில் இடம் பெற்றது. (உ-எ)

## போராளிகளுக்கு எதிராக ஜிஹாத் இயக்கம் திருப்பப்பட்டது

### கைதான ரம்சீன் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 22

ஜிஹாத் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது இஸ்லாமிய சட்டத்துக்கு விரோதமாக நடப்பவர்களைக் கட்டுப்படுத்தவே. பின்னர் அரசு அதனை தமிழ் போராளிகளுக்கு எதிராக திசை திருப்பும் முயற்சியில் இறங்கியது.

மன்னார் எருக்கலம்பிட்டியில் இயங்கி வந்த ஜிஹாத் இயக்கத்தின் முக்கியஸ்தரான அப்துல் ஜபார் ரம்சீன் (25வயது) இவ்வாறு தெரிவித்தார்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் 28ஆம் திகதி மன்னாரில் வைத்து ஈரோஸ் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

இவர் மேலும் சொன்னதாவது:-

இஸ்லாமிய பகுதியில் நடைபெறும் கொள்ளை, சூது, குடி, சண்டை போன்றவற்றைக் கட்டுப்படுத்த இளைஞர்கள் ஆகிய நாம் முன் வந்தோம்.

பின்னர் எம்மை கண்டிக்கு அழைத்த அரசு,சிப்பாய்கள் மூலம் 18நபட்களுக்கு எமக்கு ஆயுதப் பயிற்சி அளித்தது

பயிற்சியின் பின்னர் "சொட்கன்" "ரிப்பீட்டர் சொட்கன்" போன்ற துப்பாக்கிகள் எமக்குத் தரப்பட்டன.

இதனைக்கொண்டு நாம் எமது சமூகத்தை பாதுகாத்து வந்தோம்.

ஆனால்வேறு பகுதிகளில் உள்ள எம் இயக்கத்தவர்களை இந்து முஸ்லிம் மக்களிடையே பிளவைஉண்டு பண்ணும் முயற்சியில் ஈடுபடுமாறு அரசு நிர்ப்பந்தித்தது.

மட்டக்களப்புப் பகுதியில் பெரும் இனக்கலவரங்கள் மூண்டதற்கு காரணம் ஜிஹாத் இயக்கத்தினரே.

இதன் தலைவரும் ஆயுதப் படையினரால் சுட்

(4ஆம் பக்கம் பார்க்க)

### 'ஜிஹாத்' இயக்கம் தடைசெய்யப்பட்டது

#### ஈரோஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 22

மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் முஸ்லிம்களுக்காக அரசினால் ஆரம்பிக்கப்பட்ட 'ஜிஹாத்' என்னும்இயக்கம் ஈரோஸ் இயக்கத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது

ஜிஹாத் இயக்கத்தவர்களுக்கு அரசு பயிற்சி அளித்து ஆயுதங்களும் வழங்கி இருந்தது

தமிழ்ப் போராளிகளைப் பிடித்துத் தரும்படி அவர்களுக்கு அறிவுறுத்தி இருந்தது என்று கூறப்படுகிறது

இதன்பிரகாரம் மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடிப் பகுதிகளில் இருந்து முக்கிய கலவரங்களுக்குத் தூண்டுகோலாகவும் ஜிஹாத் இயக்கம் செயற்பட்டது.

இதனை அடுத்து மேற்படி இயக்கத்தைக் கலைக்கும்படி முஸ்லிம் மக்கள் வேண்டுகோள் விடுத்ததால்மட்டக்களப்பு அக்கரைப்பற்று பகுதிகளில் இயங்கிய 'ஜிஹாத்'இயக்கம் கலைக்கப்பட்டது.

இதேபோலவே மன்னார் எருக்கலம்பிட்டியில் இயங்கிவந்த மேற்படி இயக்கத்தையும் 'ஈரோஸ்' இயக்கத்தினர் தற்போது தடைசெய்துள்ளனர். (இ-10)

## அரசாங்கததைக் கவிழ்க்கச் சதி 23 பேர் மீது வழக்குத் தாக்கல்

### எதிரிகளில் மூவர் தமிழர்; ஏனையோர் சிங்களவர்

கொழும்பு, ஜன 22

இலங்கை அரசாங்கத்தைப் பலாத்காரம்மூலம் கவிழ்க்கச் சதி செய்ததாக 23 பேர்மீது நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

23 எதிரிகளில் மூவர் மட்டுமே தமிழர்கள். ஏனையவர்கள் சிங்களவர். சிங்கள எதிரிகளில் ஆண்களும் பெண்களும் அடங்குவர்.

எதிரிகளான சிங்களவர்களில் பெரும்பாலும் கொழும்பில் வசிக்கும் செல்வாக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், கல்விமான்களும் ஆவர்

ஓர் எதிரியின் தந்தை, அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் தலைவராக இருக்கின்றார்.

இன்னோர் எதிரியின் தந்தை, கொழும்பில் உள்ள பிரபல மெதடிஸ்த போதகர்.

ஓர் எதிரி, அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் 'பில்பிரைட்' புலமைப் பரிசில் பெற்றுப் படிப்பவர். கொழும்பு பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இவர் கலாநிதிப் பட்டமும் பெற்று இருக்கிறார்.

பெண் எதிரிகளில் ஒரு

(4ஆம் பக்கம் பார்க்க)

### குற்றச்சாட்டுக்களின் முழு விவரம்

கொழும்பு, ஜன 22

இருபத்து மூன்று எதிரிகள் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் வருமாறு:

★ 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதிக்கும் 1986 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை அரசாங்கத்தை வன்செயல் மூலம் கவிழ்க்கச் சதி செய்தது.

★ அதற்கான ஆயுதங்கள், குண்டுகள் வெடிமருந்துகள், சேகரித்தமை.

★ இராணுவப் பயிற்சியைப் பெறுவதற்காக ஆட்களைத் திரட்டி இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது

★ அரசாங்கத்தைக் கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்ற ஒரு பகுதி மக்களைத் தூண்டிவிட்டது.

★ இரண்டு கொள்ளைகளை நடத்தியமை. (உ-எ)

### சுபநேரம்

22—01—1987

வியாழக்கிழமை

சுபநேரம்:

8.05 முதல் 9.35 வரை

ராகுகாலம்:

2.05 முதல் 3 35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### இச்சந்தி இறளி



பதுளையில் ஏழு பேர், செத்ததுக்கு இஞ்சை அஞ்சு பேர் மீது பழி வாங்கலோ.......அல்லது போராளிகள் எண்டு கணக்குக் காட்டவோ..?

### அரச உத்தரவை நிறைவேற்றுகிறேன் என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம், ஜன. 22

"நானும் ஒரு மனிதாபிமானமுள்ள மனிதன் தான். எனக்கும் உங்கள் கஷ்டங்கள் விளங்குகின்றன. ஆனால் என்ன செய்வது. அரசாங்கத்துக்கு கட்டுப்பட்ட அரச அதிகாரி என்பதால் அரசின் உத்தரவுகளை நிறைவேற்றும் பொறுப்பு என்னுடையது.

நேற்று ஆனையிறவு முகாமுக்கு சென்ற வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கத்தினரிடம் ஆனையிறவு இராணுவ முகாம் உயரதிகாரி ஒருவர் இப்படி சொன்னார்.

அவர் மேலும் கூறுகையில் எமது பரிசோதனைக்குட்படுத்தப்படும் ஒவ்வொரு லொறியும் தாமதிக்காமல் செல்ல வேண்டுமானால் நீங்கள் 25 கூலியாட்களை பொருள்களை ஏற்றியிறக்குவதற்கு தந்து உத

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★


**வகுப்புகள்**

108, Brown Road, Jaffna A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 23 - 1 - 87 வெள்ளி பிரிவு I 6.15 a.m, பிரிவு II 5.00p.m பிரிவு I வெள்ளி, செவ்வாய், வியாழன் 6 15 a m பிரிவு II வெள்ளி, செவ்வாய் 5 00 p m

**தேவை**

புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் நூலகத்திற்கு அனுபவமுள்ள நூலகர் உடன் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி; விளம்பர எண் 48, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஓவியர் தேவை. ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விளம்பர எண்: 47, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

இயந்திரஇயக்குநர்கள் தேவை ஹைடில்பேர்க் (HEIDELBERG) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்கவேண்டும். விளம்பர எண்: 43 மே/பா உதயன் யாழ்ப்பாணம்


வடமராட்சியில்

# தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முயற்சி

பருத்தித்துறை ஜன. 22 வடமராட்சிப் பகுதியில் அடுத்து வரும் மாதங்களில் தென்னை புனர் நடுகையை ஊக்குவித்து செயற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக தோட்டங்களில் தென்னங்கன்றுகளை நடுபவர்களுக்கும், புனர் நடுகையில் ஈடுபடுபவர்களுக்கும் அரசின் மானியத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தென்னைப் பயிர்ச்செய்கையில் ஏற்படும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்கமாக முதலில் அம்பன் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள செம்பியன்பற்று விவசாய விரிவாக்க சேவை உத்தியோகத்தர் பிரிவில் கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கு இன்று மாலை அம்பன் விவசாயப் போதனாசிரியர் திரு. வ. பரமேஸ்வரன் தலைமையில் செம்பியன்பற்று அபிவிருத்திசபை உப அலுவலகத்தில் நடைபெறும்.

தென்னை நாற்று மேடை தயாரித்தல், நாற்றுத் தெரிதல், நடுகை, பராமரிப்பு பசளைப் பிரயோகம், பூச்சிநோய்த்தடுப்பு மானியம் முதலிய விடயங்களில் கருத்துக்கள் வழங்கப்படும்

இக்கருத்தரங்கைத் தொடர்ந்து நடைபெறும் கருத்தரங்குகளிலும் விவசாயிகளைக் கலந்து கொண்டு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் படியும்—

மானிய உதவிகளைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் செம்பியன்பற்று விவசாய விரிவாக்க சேவை உத்தியோகத்தர் திரு செ. ரூபசிங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-118)

## மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கே கடன் உதவி

### மாதர் சங்கக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

சுன்னாகம், ஜன 22 மக்களிடையே பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே எமது சங்கம் கடனுதவிகளையும் ஏனைய வசதிகளையும் உங்களுக்கு செய்து வருகிறது. அதனால் பயன் பெறுவது உங்கள் திறமையைப் பொறுத்ததே.

சுன்னாகம் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு சி. குமாரவேல் இவ்வாறு கூறினார்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதர் சங்கக்கிளையை அங்குரார்ப்பணம் செய்து பேசுகையில் திரு. சி. குமாரவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தில் திரு எஸ் யோகானந்தராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் சுன்னாகம் பிரசைகள் குழுவின் இணைச் செயலாளர் திரு சபா புஷ்பநாதன் பேசுகையில் மக்களின் அன்றாட பாவனைப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது மாத்திரம் நாம் கூட்டுறவுக் கடைகளை நாடுகிறோம்.

ஏனைய பொருள்களை தனியார் கடைகளில் வாங்குகிறோம். இந்தநிலை மாறி எல்லாப் பொருள்களையும் நாம் கூட்டுறவுக் கடைகளிலே பெற முயல வேண்டும் என்றார்.

திரு. எஸ் குலசிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (இ-27)

## காட்டுப் பன்றி தொல்லை

நெடுங்கேணிப் பகுதியில் காட்டுப்பன்றிகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது வீட்டுத்தோட்டப் பயிர்கள், உழுந்து, நெல்போன்ற பயிர்கள் பன்றிகளினால் நாசமாக்கப்படுகின்றன

இதனால் மக்கள் இரவு நேரத்தில் விழித்திருந்து தமது பயிர்ச்செய்கையைப் பாதுகாத்துவருகின்றனர். (உ-108)

மக்கள் முகம்

## கால்நடை வளர்ப்போர் சங்கம்

சாவகச்சேரி, ஜன 22 சாவகச்சேரியில் கால்நடைவளர்ப்போர்சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்;- திரு. க. சிவபாதசுந்தரம் (கல்லூரி அதிபர்) உப தலைவர்:- திரு. கே. கனகநாயகம் செயலாளர்:- திரு. கே. சோமபால (மிருகவைத்தியர்) பொருளாளர்:- திரு எஸ். குமாரசாமி

மேலும் ஐவர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். (இ 31)

## சுன்னாகத்தில் வரியிறுப்பாளர் சங்கம்

சுன்னாகம். ஜன. 22 சுன்னாகம் மக்களின் சுகாதார பிரச்சினைகள் குறித்தும் மின்சார-தண்ணீர் விநியோக சீர்கேடுகள் குறித்தும் மாவட்ட அபிவிருத்திச் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதி மக்கள் சார்பில் வரியிறுப்பாளர் சங்கம் அமைக்கப்படவுள்ளது

முன்னாள் கல்விப்பணிப்பாளர், முன்னாள் தபாலதிபர், முன்னாள் புகையிரத நிலைய அதிபர் ஆகியோர் கொண்ட குழு ஒன்று இது சம்பந்தமாக மக்களுக்கு விளக்கமளித்து பிரசுரங்களை விநியோகித்துள்ளது (இ-27)

# இணைப்பு இல்லாவிடில் கிழக்கு மக்களே பாதிப்படைவர்

### வடமராட்சிப் பிரசைகள் குழுத்தலைவர் உரை

கரவெட்டி, ஜன. 22 "வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் ஒன்றிணைந்த நிர்வாகத்தின் கீழ் வராதவிடத்து கிழக்கு மாகாண மக்களே பெரும் பாதிப்புக்குள்ளாகுவர். இதை நாம் மட்டக்களப்பு பிரசைகள் குழுவிடம் தெரிவித்தோம்."

— இவ்வாறு வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்ற நெல்லியடி பிரசைகள் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய வடமராட்சி பிரசைகள்குழுத்தலைவர்திரு. ஜே ஜீ இராசேந்திரம் குறிப்பிட்டார்

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இக் கூட்டத்திற்கு நெல்லியடி பிரசைகள் குழுத் தலைவர் வி. மகாலிங்கம் தலைமை வகித்தார்

கொலை, மானபங்கம், சித்திரவதை கைது செய்தல், பெண்களைக் கேவலப்படுத்துதல் போன்ற அனர்த்தங்கள் மத்தியில் மட்டக்களப்பு மாவட்டமே சேற்றில் ஆழ்ந்து கிடக்கிறது

மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள் முஸ்லிம்கள் நாம் இனிச் சிங்களவருடன் ஒருபோதும் ஒன்றுபட்டு வாழ முடியாது என கிழக்கு மாகாண முஸ்லிம் பிரசைகள் குழுவினர் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரசைகள் குழுக்களின் மாநாட்டில் தெரிவித்தனர் —

இப்படித் திரு. இராசேந்திரம் தமது உரையில் கூறினார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இந்தியத் தூதுவர் டிக்ஸிற், பாப்பரசர் ஆகியோருக்கு மட்டுமன்றி சகல வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் தெரிவித்துள்ளோம் எனவும் இராஜேந்திரம் குறிப்பிட்டார். (உ-70)

## திருவுருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜன 22 கல்விமானான அமரர் திரு இ. க. சண்முகநாதனின் திருவுருவப் படம் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3-30 மணியளவில் கோப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப மொத்த விற்பனைவு நிலைய மண்டபத்தில் திரை நீக்கஞ் செய்யப்படவுள்ளது

இவ்வைபவத்தில் கல்விமான்களும் கூட்டுறவுத் தலைவர்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

அமரர் சண்முகநாதன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர், யாழ் மத்திய கல்லூரி அதிபர் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்தவர்

பின்னர் நைஜீரிய நாட்டு அரசில் உயர் பதவி வகித்து வருகையில் அவர் மறைந்தார். (உ-ஏ)

1986 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட

## சம்பள உயர்வு ஆசிரியர்களுக்குக்கிடைக்குமா?

யாழ்ப்பாணம், ஜன. 22 1986 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து சகலதர ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வு ஒன்று வழங்கப்பட்டது.

இச் சம்பள உயர்வு ஆசிரியரின் அடிப்படைச் சம்பளத்தில் சிறுதொகை உயர்ச்சியே.

என்றாலும் இச்சம்பள உயர்வு சில ஆசிரியருக்கு வழங்கப்படவில்லை.

12 மாதங்களாக இச் சம்பள நிலுவைக்காக ஆசிரியர்கள் பலர் காத்திருக்கின்றனர்

பெரும்பான்மை ஆசிரியருக்கு சம்பளம் மாற்றி அமைக்கும் கடிதமே கிடைக்கவில்லை

இக்கடிதம் கிடைத்த பின்னர்தான் சம்பள உயர்ச்சி நிலுவை வழங்கப்படும்.

இச்சம்பளம் மாற்றி அமைக்கும் கடிதம் ஆசிரியர்களுக்குக் கிடைக்க கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆசிரியர் தரப்பில் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. (உ)

## கவலை தெரிவிப்பு

சாவகச்சேரி,ஜன22 கைதடி நவபுரம் ஆரம்பப்பாடசாலையின் இன்றைய நிலை குறித்து இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பெரும் கவலை தெரிவிப்பதுடன் யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளரிடம் இது குறித்து முறையிடவும் முடிவு செய்துள்ளனர்.

1961 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பத்தாம் வகுப்புவரை பல ஆசிரியர்களுடன் இயங்கிவந்த இப்பாடசாலை இன்று 40 மாணவருடனும் ஒரு ஆசிரியருடனும் இயங்குகின்றதாம். (உ)

## பேராளர் மாநாடு

யாழ்ப்பாணம். ஜன 22 பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவின் பேராளர் மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள இலங்கை மலாயன் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது (உ-ஏ)

## வெகுஜன இயக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜன 22 மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று வியாழன் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில்நடைபெறும்.

எரிபொருள் தடை, சிறையில் உள்ள இளைஞர்கள் விவகாரம். அரசின் மனித உரிமை மீறல்கள் ஆகியன குறித்து இக்கூட்டத்தில் ஆராயப் பட உள்ளன. (உ-ஏ)

பெற்றோருக்கு அறிவுறுத்தல்

## ஆரம்பக் கல்வியின் அவசியத்தைஉணர்ந்து செயற்பட வேண்டும்

கரவெட்டி, ஜன. 22 'பிள்ளைகளின் கல்வியின் ஆரம்ப அடித்தளம் மிகவும் நன்றாக அமைந்தால் தான் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல வாழ்க்கையை அமைக்க முடியும் இந்த அடிப்படையில் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பெற்றோரும் உணரவேண்டும்.

இவ்வாறு நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்த யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ் சோமசுந்தரம் அங்கு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்

பாடசாலை அதிபர் திரு. ரீ. மயில்வாகனம் தலைமையில் விழா இடம் பெற்றது

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஏ. வி தங்கராஜா அங்கு உரையாற்றுகையில்--

'எமது பொருளாதார, அபிவிருத்திக்கு தொழில் நுட்ப கல்வி மிகவும் முக்கியமானதாகின்றது எனவே நாம் தொழில் நுட்பக் கல்வியில் மிகவும் கவனமெடுத்து தொழில்நுட்பத் துறையை வளர்க்கவேண்டும் என்றார். (உ-70)

தச்சுவேலை பயிலுனர்களுக்கு

## உபகரணம் வழங்க நடவடிக்கை

கரவெட்டி, ஜன 22 தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பயிற்சித் திட்டத்தின் கீழ் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தச்சுவேலை. மேசன் வேலை பயின்று வருவோருக்கு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது

தச்சுவேலை பயிலுனர்கள் பதின்நான்கு பேருக்கும் மேசன்வேலை பயிலும் ஒன்பது பேருக்கும் நாளை வெள்ளிக்கிழமை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை இவற்றை வழங்குவார்

தேசிய வீடமைப்பு அதிகாரசபை இதற்கான உபகரணங்களை வழங்கியுள்ளது. மேசன் வேலை பயிலும் மேலும் ஐந்து பேருக்கு உபகரணங்களை வழங்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (உ-70)

## காட்டுப்புலம் கிராம எழுச்சித் திட்ட மரம் நடும் விழா

கரவெட்டி, ஜன 22 காட்டுப்புலம் கிராம எழுச்சித் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக மரம் நடும் வைபவம் அமைந்துள்ளது

இவ்வாறு காட்டுப்புலம் கிராம எழுச்சித் திட்டத்தின்கீழ் நடைபெற்ற மரம் நடும் விழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை மேற்கண்டவாறு கூறினார்

காட்டுப்புலம் ஐக்கிய நாணய சங்கத் தலைவர் திரு சி. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை மேலும் உரையாற்றுகையில் இக்கிராம மக்களுடன் அளவளாவி இக்கிராமத்தின் அபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் என்றார்.

யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் திரு. வி. த முருகையா குறிப்பிடுகையில், இக்கிராமத்திற்கு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் '30' வீடுகளுக்குக் குறையாமல் அமைப்பதற்கு கடனுதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

கட்டைவேலி - நெல்லியடி ப நோ. கூட்டுறவு சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை உரை நிகழ்த்துகையில், கூட்டுறவுத்துறைமூலம் செயற்படவேண்டிய சிலகோரிக்கைகள் இப்பகுதி மக்களினால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் கட்டைவேலி-நெல்லியடி ப நோ கூ சங்கம் தனது பூரண ஒத்துழைப்பையும் வழங்கவுள்ளது என்றார்.

மில்க்வைற் தொழிற்சாலை உரிமையாளர் திரு. கனகராஜா சுமார் நாலாயிரம் ரூபா பெறுமதியான மரங்கள், அப்பியாசக் கொப்பிகள் போன்றவற்றை வழங்கினார். (இ-70)

## பல்கலைக்கழக அனுமதி யாருக்குக் கிடைக்கும் என்று தெரியாது மாணவர் தவிப்பு

கரவெட்டி, ஜன.22 அரசு மாறும்போது கல்வித் திட்டமும் அதற்கு ஏற்ப மாற்றமடைகிறது, தற்போதைய அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தினால் உதர்தரத்தைப் படித்து முடித்து விட்டு யாருக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமெனத் தெரியாதநிலையில் மாணவர்கள் தவிக்கின்றனர்.

வடமராட்சி கருக்கெழுத்துக் கழகத்தில் பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு. வி. தங்கராஜா மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் கிருஷ்ணபிள்ளை தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு ஸ்ரீ வி. செ. சுவாமிநாதன் உரையாற்றுகையில் தனிமனித முயற்சியிலும் [illegible] இவர்கள் இருவரும் ஒரேகழகம் வடமராட்சி சுருக்கெழுத்தாளர் சங்கம் என்றார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை யாழ் சுருக்கெழுத்துக்கழக ஆசிரியர் திரு குலசிங்கம், செல்வி கமலா, வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக பிரதம அமைப்பாளர் திரு க. வ சிவச்சந்திரதேவன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்,

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தலைவி செல்வி மாலினி கந்தவனம் நன்றியுரை வழங்கினார்.

உடுப்பிட்டி வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் பயின்றவர்களுக்கு சான்றிதழ்களைப் பிரதம கல்வியதிகாரி திரு வி. தங்கராஜாவும். அல்வாய், பருத்தித்துறைப் பகுதிகளில் பயின்றவர்களுக்குச் சான்றிதழ்களைக் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரையும் அல்வாயில் தமிழ் தட்டெழுத்துப் பயின்றவர்களுக்கான சான்றிதழ்களை கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஸ்ரீ வி. செ. சுவாமிநாதனும் வழங்கினர். (இ-70)

## சமய நிறுவனங்களின் பன்முகப் பணி தேவை

யாழ்ப்பாணம், ஜன. 22 மக்களைச் சமய வாழ்க்கை வாழச் செய்து மனித ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதே சமயநிறுவனங்களின் செயற்பாட்டின் முக்கியத்துவமாகும். இன்றைய நிலையிலே சமய நிறுவனங்கள் சமுதாயத்திற்கு வேண்டிய பல்வேறு வகையான முயற்சிகளில் ஈடுபட வேண்டியுள்ளது.

இன்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் நல்லூர் இளைஞர் மன்றத் தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

இப் பொதுக் கூட்டம் பேரவைத் தலைவர் திரு சி. சி சண்முகலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

திரு. பாலசுப்பிரமணியம் மேலும் குறிப்பிடுகையில்;-

இந்து இளைஞர் பேரவை சர்வதேச மட்டத்தில் மிகவும் பலம்வாய்ந்த ஒரு அமைப்பாக இயங்க வேண்டும். யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை சமுதாயத்திற்கு வேண்டிய சமயப் [illegible] வேண்டும் என்றார் (உ-70)

## கூட்டு முயற்சியில்தான் கூட்டுறவுச் சங்க வளர்ச்சி தங்கியுள்ளது

கொடிகாமம்,ஜன.22 "பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பூரண வளர்ச்சி, சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களின் கூட்டுமுயற்சி ஒற்றுமை மனப்பான்மை பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றிலே தான் பெரிதும் தங்கியுள்ளது"

கூட்டுறவுப் போதனாசிரியரும் கூட்டுறவு அபிவிருத்தி விரிவாக்க உத்தியோகத்தருமான திரு. சு. கந்தையா அவர்கள் இவ்வாறு கூறினார்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 26 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. அ திருநாவுக்கரசு ஆசிரியர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது அங்கு உரையாற்றுகையிலேயே திரு கந்தையா இவ்வாறுகூறினார்

தலைவர் திரு. திருநாவுக்கரசு தனது உரையில்–

மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு வரும் இவ் வேளையில் அதை வீழ்ச்சியடையாமல் சட்டியெழுப்பும் ஒரு ஸ்தாபனம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே யாகும். அதனைத் தகுந்த முறையில் வழிநடத்த வேண்டியவர்கள் பொதுச் சபை உறுப்பினர்களே யாவர் என்றார். (உ-25)


**வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை**

17, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

(யாழ்நகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையில்)

- ★ இரவு பகல் சேவை
- ★ வெளி நோயாளர் சேவை
- ★ தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகள்
- ★ வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள்
  - ★ பொது வைத்தியத்துறை (General Medicine)
  - ★ சத்திர சிகிச்சை (Surgical)
  - ★ மகப்பேறு (Obstetrics, Gynaecology)
  - ★ காது, மூக்கு, தொண்டை (E.N.T.)
  - ★ சிறுவர்களுக்கான வைத்தியத்துறை (Paediatrics)
  - ★ கண் சிகிச்சை (Eye)
  - ★ சரும நோய் (Skin)
  - ★ மனநோய் (Psychiatrics)

**A/L 89 Aug.**

ஆரம்பம்:

24-1-1987 சனிக்கிழமை

(SAT. & SUN.)

PURE ) APPLIED ) MATHS — 11.30-1 30 by MR. NALLIAH

BOTANY — 12 30-1 30 by MR. KUGATHARAN

ZOOLOGY — 1 30-2.30 by MR. NAGANATHAN

PHYSICS — 2,30-3 30 by MR VARNAM

CHEMISTRY — 3.30-4.30 by MR. THILLAINATHAN

**New Master Institute**

B. M. C. LANE, JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவு.

— ரஸ்கின்.


# உதயன்

உண்மை - நிதானம் - நடுநிலைமை

இல,10, ஆஸ்பத்திரி ஒழுங்கை தொலைபேசி: 24808
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 22-01-1987 த. பெ இல 88


## ராஜீவின் அவநம்பிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்திய மத்தியஸ்தத்தோடு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சி தேக்கமடைந்து விட்டது அது முற்றாக ஸ்தம்பித்து விடுமோ என்று அஞ்சும் சூழ்நிலையும் தோன்றி உள்ளது

கடந்த நான்கு வருட கால முயற்சிகளும் பேச்சுக்களும் பயனற்றுப் போகும் பயங்கர நிலைமை உருவாகி இருக்கிறது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்து தேக்க நிலையை — ஸ்தம்பித நிலையை ஊர்ஜிதம் செய்கிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு அக்கறை காட்டுவதாக இல்லை அது ஸ்திரமற்ற நிலையில் உள்ளது—

டிசம்பர் 19 இல் இந்தியத் தூதுக்குழுவிடம் கொடுத்து அனுப்பிய சில புதிய யோசனைகளிலிருந்து இரண்டு நாட்களில் இலங்கை அரசு பின்வாங்கி விட்டது—

இந்த மாதிரி ஸ்திரமற்ற தன்மையுள்ள இலங்கை அரசுடன் எப்படிப் பேசுவது? பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது?—

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து உறுதியான யோசனைகள் வராதவரை இந்திய அரசினால் ஒன்றுமே செய்யமுடியாது

இவ்வாறு திரு. ராஜீவ் காந்தி தெரிவித்திருக்கிறார்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் 'சார்க்' மாநாடு நடக்கும் போதும் அதற்கு முன்னரும் பேச்சைத் தொடங்குவதற்கும், தொடர்வதற்கும், நல்ல தீர்வுக்கும் உரிய சூழ்நிலை உருவாகி வந்ததாக நம்பிக்கை கொண்டிருந்தவர் ராஜீவ்

சிதம்பரம் குழு இங்கு முதற் தடவையாக வந்து போன பின்னர் நடந்த பேச்சுக்கள், இலங்கை தெரிவித்த யோசனைகள் நம்பிக்கை தருவனவாக இருக்கின்றன என்று சொல்லி வந்தவர் ராஜீவ்.

மூன்று மாத காலத்தில் அந்த நம்பிக்கையில் ஒரு துளிதானும் இல்லாமல் விரக்தி அடைந்த நிலையில் இப்போது அவநம்பிக்கையுடன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பிரச்சினை இலங்கையினுடையது சிங்கள அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பிரச்சினை அது அதனைத் தீர்த்து சமரசத்தை உண்டாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மத்தியஸ்தராக வந்து சேர்ந்தது இந்தியா. இந்தியாவின் அந்த மத்தியஸ்தப் பதவியை பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு சாராரும் ஏற்றுக்கொண்டார்கள்.

மத்தியஸ்தர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து உதவி புரிந்து. விட்டுக்கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அதனோடு சம்பந்தப்பட்ட இரு சாராருக்கும் பெரும் பங்கு உண்டு.

ஆனால் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை அரசு பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வைக் காணவேண்டும் என்பதில் அக்கறை கொள்ளவில்லை. பிரச்சினையை தீர்க்க அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டதே அன்றி உண்மையாக அக்கறை கொள்ளவில்லை. நித்திரை செய்பவனை இலகுவில் எழுப்பிவிடலாம், நித்திரை போலப் பாசாங்கு செய்பவனை எப்படி எழுப்புவது?

இலங்கையின் போக்கை இந்தியா ஒரு கட்டத்தில் புரிந்துகொண்டது இந்திய அமைச்சர்கள் அதிகாரிகளின் இடைவெளி விட்டு இடைவெளியில் தெரிவித்த சில கூற்றுக்கள், எச்சரிக்கைகள் அதனை ஊர்ஜிதம் செய்தன எனினும் நேற்று முன்தினம் ராஜீவ் போட்ட போடு இலங்கையின் உண்மையான தோற்றத்தை அப்பட்டமாக எடுத்துக்காட்டி விட்டது

இந்தியாவோடு ராஜதந்திர ரீதியில் ஒரு கால் சூடுகாட்டுவதும், மறுகால் குளிர்ச்சி காட்டுவதும், முதலில் வீம்பு பேசுவதும் பின்னர் தணிந்து பணிந்து போவதுமான இலங்கையின் நடவடிக்கைகளும், போக்குகளும் பிரச்சினையைத் தீர்ப்பதில் அதற்கு அக்கறை இல்லை என்பதையே ஊர்ஜிதம் செய்தன.

இந்தியாவின் மத்தியஸ்தத்தில் இருந்து நழுவி விடவும் இலங்கை அரசு பலதடவைகள் முயற்சித்தது உண்டு

ஆகக் கடைசியாக, இலங்கை ஜனாதிபதி மாதம்பையில் வைத்து ''இரண்டில் ஒன்று'' மெட்டிசைத்தார் தமிழர்களுக்குக் கொடுக்கக்கூடியது எல்லாவற்றையும் தாம் கொடுக்க முன்வந்ததாகவும், இனிமேல் கொடுக்க எதுவும் இல்லை என்றும் அவர் இறுதிக் கட்டை சொருகிவிட்டார்.

அவர் ''கொட்டிக் கொடுத்த'' யோசனைகள் தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளைத்தானும் பூர்த்தி செய்வதாக இல்லை.

இந்த நிலையில் ராஜீவ் எதிர்பார்க்கும் உறுதியான யோசனைகள் எதையும் அவர் தெரிவிப்பார் என்று நம்புவதற்கில்லை.

அதற்காக இந்தியா தான் எடுத்த பணியை கைவிட வேண்டும் என்பதல்ல தானாக ஒரு நியாயமான தீர்வை முன்வைத்துப் பிரச்சினையைத் தீர்க்க, தொடர்ந்து பாடுபட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கமுடியவில்லை என்று கூறி இலங்கை இராணுவத் தீர்வில் இறங்குவதற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது அதனையே ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள் அவநம்பிக்கையின் மத்தியிலும் இந்தியா தனது முயற்சியைக் கைவிட்டு விடாது என நம்புகிறார்கள்.

## "இந்திய சரித்திரம் ஆரம்பிக்கும் இடம்"

சென்னை, ஜன 21

இந்திய சரித்திரம் தென் இந்தியாவில் இருந்தே ஆரம்பமாக வேண்டும் நாகரிகத்தின் தொட்டில் தென் இந்தியா என்பதை நிரூபிக்கும் பல சான்றுகள் உள்ளன. உலக சரித்திரத்தை உருவாக்குவதற்கு தென் இந்தியக் கலாசாரம் பெரும் பங்காற்றியிருக்கிறது

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு எஸ் வி சிட்டிபாபு முன் சண்டவாறு தெரிவித்தார்

தென் இந்திய சரித்திர காங்கிரஸின் ஏழாவது வருடாந்த மாநாடு அண்மையில் நடைபெற்றது மாநாட்டை அங்கு ரார்ப்பணஞ் செய்து வைத்துப் பேசுகையில் திரு. சிட்டிபாபு இதனைத் தெரிவித்தார்

திரு. சிட்டிபாபு மேலும் பேசுகையில்.

தென் இந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன பொது அடிப்படையில் எழுதப்பட்டவையாகும் என்றும் திரு. சிட்டிபாபு தெரிவித்தார். (ஓ-எ)

## எம்.பிக்கள் நீக்கம் குறித்துத் தமிழக ஆளுநர்

சென்னை, ஜன 21

பத்து தி மு. க. எம் எல். ஏக்களை பதவி நீக்கஞ் செய்யும் தீர்மானத்தை சட்டசபை நிறைவேற்றியதுடன், இப்பிரச்சினையில் என்னால் தலையிட முடியாது

இப்படி தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானு தெரிவித்தார்.

சபாநாயகர் தி. மு க எம். எல். ஏக்களை வெளியேற்றினார்.

அதன் பின்னர் சட்ட சபை வெளியேற்றும் தீர்மானம் ஒன்றை எடுத்தது.

சட்டசபைத் தீர்மானம் அதிக புனிதத் தன்மை வாய்ந்தது

இத்துடன் எனது பணியும் முடிந்து விட்டது

இப்படி திரு. குரானு செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார். (ஓ-எ)

# பாகிஸ்தானுடனை உறவைத் துண்டிக்க

## அமெரிக்காவுக்குச் சிபார்சு

வாஷிங்டன், ஜன. 21

பாகிஸ்தானுடன் அரசியல் ராணுவ உறவுகளை அமெரிக்கா தொடர்வது மிகவும் ஆபத்தானதாகும்.

இவ்வாறு அமெரிக்காவில் வெளியிடப்பட்ட அமெரிக்க அரசு கொள்கை ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடன் அமெரிக்கா உறவுகளை விலக்கிக்கொள்ளும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அமெரிக்காவின் நவீன ஆயுதங்களைப் பாகிஸ்தான் கடந்த காலத்தைப்போல் இந்தியாவிற்கு எதிராகக் கட்டாயமாகப் பயன்படுத்தும்.

இது இந்தியா-பாகிஸ்தான் உறவுகளுக்கும் இந்திய-அமெரிக்க உறவுகளுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்துவதாக அமைவதுடன் ரஷ்யாவின் ஆதிக்கம் இந்தியாவில் பலமடையவும் வழிகோலும் என்றும் அந்த ஆய்வு அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது

அண்மைக் காலங்களில் பாகிஸ்தானில் அணு ஆயுத பரிசோதனைகளுக்கும் அமெரிக்கா தாராளமாக உதவியுள்ளது சண்டிக்கப்பட வேண்டும் பாகிஸ்தான் அணுஆயுத உற்பத்தி செய்யும் பொழுது இந்து சமுத்திரப் பகுதிகளும் வளைகுடாப் பகுதிகளும் பயங்கரத்தை எதிர்நோக்குவதாகவே அமையும்

எனவே அமெரிக்க — பாகிஸ்தான் உறவுகள் துண்டிக்கப்படவேண்டும். இதன் மூலம் இந்துமா சமுத்திர அமைதிக்கு அமெரிக்கா ஆதரவளிக்க முடியும் எனவும் அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (ஓ)

### தூரன் மறைந்தார்

சென்னை, ஜன. 21

புகழ்பெற்ற தமிழ் இலக்கிய அறிஞர் பெ. தூரன் நேற்று சென்னையில் தமது 79 ஆவது வயதில் காலமானார்

தமிழில் முதன் முதலாக விரிவான கலைக் களஞ்சியம் தொகுத்த தூரன் பல சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்

1968 ஆம் ஆண்டு பத்மபூஷண் விருது இவருக்கு வழங்கப்பட்டது

### சிரோன்மணி விருது

நேற்று அன்னை திரேசாவிற்கு சிரோன்மணி விருது ஜனாதிபதி ஷெயில் சிங்கினால் வழங்கப்பட்டது

இவருடன் வேறு 36 பேருக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.

ஓட்ட வீராங்கனை பி டி உஷாவும் இவர்களில் ஒருவராவர். (ஓ)

### வெளி உலகில்

## பத்திரிகைத் தணிக்கையை எதிர்த்து சட்ட நடவடிக்கைக்காக நிதி

லண்டன், ஜன. 21

பத்திரிகைத் தணிக்கையை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உலக நிதி ஒன்றை ஆரம்பிக்க 39 நாடுகளைச் சேர்ந்த பத்திரிகை வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் பத்திரிகையாளர்களைக் காப்பாற்றக் கூடியதாக அவசர தொலைத் தொடர்பு ஒன்றையும் உருவாக்க இவர்கள் மேலும் தீர்மானித்திருக்கின்றனர்

லண்டனில் நடந்த இரண்டு நாள் மாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன

5 கண்டங்களைச் சேர்ந்த 32 செய்தி ஸ்தாபனங்கள் அங்கம் வகிக்கும் உலக பத்திரிகை சுதந்திரக் குழு இந்த மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தது

இப்படி ஒரு மாநாடு நடந்தது இதுவே முதல் தடவையாகும்,

செய்திப் பத்திரிகைகள் மீது பயமுறுத்தல்களை பலாத்கார நடவடிக்கைகள் மூலம் மேற்கொண்டு வரும் அரசாங்கங்களைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. (ஓ-எ)

### விஷ்ணு சிலை கண்டுபிடிப்பு

சென்னை, ஜன 21

இராமநாதபுரம் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சிப்பகுதினர் ஒரு அடி உயரமுள்ள பித்தளையினால் செய்யப்பட்ட விஷ்ணு சிலை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

ஆடை அலங்காரங்களிலிருந்து இச்சிலை 18 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது என அறிவிக்கப்பட்டது (ஓ)

## புரியும் மொழியில் மருந்துச் சீட்டுக்கள்

பெங்களூர், ஜன 21

நோயாளிகள் விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளூர் மொழிகளில் மருந்துச் சீட்டுக்களை எழுதிக் கொடுக்க வேண்டும்.

இப்படி இந்திய ஜனாதிபதி ஷெயில்சிங் தெரிவித்தார்.

பெங்களூர் சென். மார்த்தா ஆஸ்பத்திரியின் நூற்றாண்டு விழாவில் பங்குபற்றிப் பேசுகையில் ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார்

உள்ளூர் மொழியில் மருந்துச் சீட்டுக்களை எழுதினால்தான் நோயாளிகள் சீட்டில் எழுதப் படுவதைப் புரிந்து கொள்ளமுடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஓ-எ)

### தென் கொரியா அமைச்சர் இராஜினாமா

சியோல் ஜன 21

தென்கொரிய உள்நாட்டு அமைச்சர் கிம்-சங்-கூவும் பொலிஸ் தலைமைத் தளபதியும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்

பொலிஸ் பாதுகாப்பில் இருந்த மாணவர் ஒருவர் மரணமானதைத் தொடர்ந்தே இந்தநடவடிக்கையாகும் (ஓ)

### செய்திக்கொத்து

### 34 மாணவிகள் தகுதி பெற்றனர்

பருத்தித்துறை ஜன 22

பருத்தித்துறை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியிலிருந்து 34 மாணவிகள் இந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ. சி ஈ. உயர்தர பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் உயிரியல் விஞ்ஞான பீடத்திற்கு 10 மாணவிகள் தகுதிபெற்றுள்ளார்கள். உயிரியல் விஞ்ஞான பிரிவில் 297 அதிக கூடிய புள்ளியாக உள்ளது பௌதிக விஞ்ஞான பிரிவில் 315 அதிக கூடிய புள்ளியை ஒரு மாணவி பெற்றுள்ளார் பௌதிக விஞ்ஞான பிரிவிற்கு 6 மாணவிகள் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்

மேலும் வர்த்தகப் பிரிவுக்கு 13 மாணவிகளும் கலைப்பிரிவுக்கு 5 மாணவிகளும் பல்கலைக்கழகம் செல்லும் தகைமைகளைப் பெற்றுள்ளனர் எனக் கல்லூரி அதிபர் திருமதி. எஸ் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (இ-118)

### மட்டுவிலில் நிறைவுவிழா

சாவகச்சேரி, ஜன. 22

மட்டுவில் தெற்கு ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலைய ஓராண்டு நிறைவு விழா தலைவர் செல்வி வே வனிதாரணி தலைமையில் நடைபெற்றது

மோகனதாஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதமவிருந்தினராக டாக்டர். த. சிங்கராசா கலந்து கொண்டார்.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா, லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பே பிலிப் கிராமசேவகர் திரு கதிர்காமநாதன், டாக்டர் பி. எட்வேட் ஆகியோரது கருத்துரைகளைத் தொடர்ந்து சுகாதாரக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-31)

### சைவசமய பிரசாரக் கூட்டம்

சாவகச்சேரி, ஜன 22

சரசாலை இந்து இளைஞர் சங்கம் நுணுவில் அம்மன் தேவஸ்தானத்தில் முதலாவது சைவ சமய பிரசாரக்கூட்டத்தைப் பொங்கல் தினத்தன்று நடத்தியது.

ஆசிரியர் திரு க. கனகரத்தினம் தலைமையில் இளைஞர் சங்க காப்பாளர் சைவப்பெரியார் திரு ச நமசிவாயத்தின் ஆசியுரையுடன் ஆரம்பமான இப்பிரசாரக் கூட்டத்தில் திரு த. நாகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

திரு கு ஞானேஸ்வரன், திரு ச வசீசன், திரு சிவசங்கரநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (இ-31)

### சைக்கிளில் சென்றவர் வழியில் மரணம்

அச்சுவேலி, ஜன 22

வடமராட்சியில் உள்ள தமது உறவினர் வீட்டில் நடைபெற்ற கொண்டாட்டத்திற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் மாரடைப்பிற்குள்ளாகி மரணமானார் ஒருவர்.

வயாவிளானைச் சேர்ந்த திரு. மாப்பாணர் யோகராசா (வயது 45) என்பவரே மரணம் ஆனவர் ஆவார்.

சைக்கிளில் வரும்போது அவர் நெஞ்சை அடைப்பதாகக் கூறி வீதி ஓரத்தில் அமர்ந்தார்.

அமர்ந்த இடத்திலேயேசில நிமிடவேளையில் ஆவி பிரிந்தது.

இத்தச்சம்பவம் திங்கட்கிழமைமாலை 6 மணி அளவில் [illegible] நேர்ரோட்டில் பெரிய [illegible] நடைபெற்றது. (ஓ-11)

### பிரசைகள் குழு தந்தி

சுன்னாகம், ஜன 22

யாழ் மாவட்டத்தில் உள்ள விற்பனைத்திணைக்கள ஊழியர்கள் 71 பேருக்கும் அரசு வேலை நீக்க நோட்டீஸ் கொடுத்தது அநீதியானது மாத்திரமல்ல அரசு பேசிக் கொள்ளும் தர்மத்திற்கும் முரணானது'' என சுன்னாகம் பிரசைகள் குழு கண்டித்துள்ளது.

விற்பனைத் திணைக்கள ஊழியர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துமாறும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தோரை பட்டினி சாவில் இருந்து காப்பாற்றுமாறும் சுன்னாகம் பிரசைகள் குழுத்தலைவர் திரு தி மாணிக்கவாசகர் ஜனாதிபதிக்கு அவசரத் தந்திச் செய்தி அனுப்பியுள்ளார் (ஓ27)

### பாடசாலை தரமுயர்வு

ஊர்காவற்றுறை, ஜன 22

கரம்பன் ஞானோதய தோலிக்க வித்தியாலயம் தரமுயர்த்தப்பட்டுள்ளது

இவ்வளவு நாட்களும் ஐந்தாம் வகுப்புவரை இருந்த இப்பாடசாலையில் ஆறும் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வசதிசேவை கட்டண அடிப்படையில் கணிதவிஞ்ஞான ஆசிரியை ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-16)

### கிராமோதய தேர்தல்

நெடுங்கேணி, ஜன. 22

நெடுங்கேணி கிராமோதய சபைத் தேர்தல் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த 9ஆம் திகதி மாலை 3 மணிக்கு விசேட சேவை உத்தியோகத்தர் தா. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றது [illegible] ம பீற்றர் பொன்கலன் [illegible] தெரிவுசெய்யப்பட்டார்.



### பொய்யாமொழி

குறள்:

தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

பொருள்:

தூயநிலை என்று கூறப்படுவது அவா இல்லாதிருத்தலேயாகும்; அவா அற்ற அத்தன்மை மெய்ப்பொருளை விரும்புவதால் உண்டாகும்.

## விவேகானந்தர் பயிற்சிநெறி இன்று ஆரம்பமாகின்றது

பருத்தித்துறை, ஜன 22

சுவாமி விவேகானந்தரின் ஜயந்திதினமான இன்று சுவாமி விவேகானந்தர் பயிற்சி நெறி பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்தில் காலை 11 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது

இப்பயிற்சிநெறியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் இரு மாணவர்களுக்கு தமிழ் நாட்டிலுள்ள ஸ்ரீஇராமகிருஷ்ண இயக்கத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் உயர்கல்வி கற்பதற்கு அன்னை சாரதா தேவியின் பெயரால் நிதியுதவி வழங்கப்படும்

இப்பயிற்சி நெறிக்கு ஜீ. சி. ஈ சாதாரணதர பரீட்சை எடுத்த மாணவர்களும் ஸ்ரீஇராமகிருஷ்ண விவேகானந்த தவவாழ்க்கையில் ஈடுபாடுள்ளவர்களுக்குமே முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்

இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தினமும் காலை 9 00 மணி தொடக்கம் காலை 11.00 மணிவரை நடைபெறும்.

பாடத்திட்டம் ஸ்ரீமத் பகவத்கீதை, ஸ்ரீஇராமகிருஷ்ணர் சரிதம், திருக்குறள், திருவாசகம், சுவாமி விவேகானந்தரின் உரை ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளாக இருக்கும்.

இப்பயிற்சி நெறி முற்றிலும் இலவசமாகவே இருக்கும்

சுவாமி விவேகானந்தரின் ஜயந்திதின நிகழ்ச்சிகள் இன்றுமாலை ஆச்சிரமத்தில் நடைபெறும். (உ 118)

### சமய சந்நிதிகளில்

### வட்டுவினி அம்பிகைக்கு அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 22

இணுவில் வட்டுவினிப் பதியுறை திருவருள்மிகு சண்ணகா பரமேஸ்வரி அம்பிகைக்கு இன்று வியாழன் தொடக்கம் 48 தினங்கள் விசேட அபிஷேகம் நடைபெறும்.

இன்று பகல் 12.00 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் மாலை 6 மணிக்கு திருவூஞ்சலும் திருவுலாவும் இடம் பெறும். (ஓ-எ)

### பாராட்டு

கரவெட்டி, ஜன. 22

கல்வி உபபணிமனைகளை அமைப்பதில் புதிய கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம் மன்சூர் காட்டிவரும் அக்கறையை துன்னாலை பிரசைகள் குழு பாராட்டியுள்ளது. (உ-70)

### கண்டனம்

கரவெட்டி. ஜன. 22

வடபகுதிக்கான எரிபொருள் தடைக்கு துன்னாலை பிரசைகள் குழு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கண்டன அறிக்கை ஒன்றையும் குழு விடுத்திருக்கிறது. (உ-70)

### நல்லை ஆதீனத்தில் பண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஜன 22

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் பண்ணிசை, யோகாசன, பால, பண்டித வகுப்புக்களை இம்மாதத்தில் இருந்து நடத்தி வருகின்றது

இலவசமாகவே இவ்வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

பண்ணிசை வகுப்புக்கள் சனி, ஞாயிறு மாலை நடைபெறுகின்றன.

யோகாசன வகுப்புக்கள் சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் மாலையில் இடம் பெறுகின்றன.

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க பாடவிதானத்துக்கு அமைய பால, பண்டித வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றன

முதியோருக்கான சைவசித்தாந்த வகுப்பு ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணிக்கு நடைபெறுகின்றது.

சமஸ்கிருத வகுப்புக்கள் போதிய மாணவர்கள் இன்மையால் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. (உ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

TYPEWRITERS - தட்டச்சு இயந்திரங்கள்
சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
**Fudo Enterprises**
Branch:-
39/17, Power House Road, 3rd Lane, JAFFNA.
Jaffna Road, Manipay. (Near Bank of Ceylon, Bitsmans)

# உதயன்

22 - 01 - 1987 வியாழக்கிழமை



**TYPEWRITERS**
Tamil - English
Standard — Portable
For Sale
**FUDO ENTERPRISES**
39/17, Power House Road
3rd Lane, Jaffna

# தொண்டாவுக்கு பயந்ததன் விளைவு
## பதுளையில் குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜன. 22
அமைச்சர் தொண்டமானின் அனுமதி இன்றி பொலீஸார் மலைநாட்டுத் தோட்டங்களுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதன் விளைவு தான் பதுளை குண்டு வெடிப்புச் சம்பவம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

திருமதி பண்டாரநாயக்கா தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தேயிலைத் தோட்டங்களுக்குள்ளும் பிரச்சினை புகுந்து விட்டது.

மலைநாட்டிலும் பயங்கர நிலைமை ஒன்று உருவாகிறது என்பதை இது

### சிறிமா அறிக்கை

எடுத்துக்காட்டுகிறது.

சொவன்னுலை எண்ணெய்க் குதத்தைத் தகர்க்கும் முயற்சி வெற்றி அடைந்து இருந்தால் கொழும்பு மாநகரமே அழிந்திருக்கும்.

தொண்டமானின் அனுமதி இன்றி தோட்டங்களுக்குள் நுழைய முடியாது.

தோட்டங்களில் இடம்பெறும் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றி பொலீஸாரினால் கண்காணிக்க முடியாதுள்ளது.

தோட்டங்களில் குண்டுகளும் தயாரிக்கப்படுகின்றன. இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளையே கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசு திண்டாடுகிறது.

மலைநாட்டுக்கும் இந்த நிலைமை பரவினால் நாட்டுக்கு என்ன நடைபெறும் என்பதை ஒருவராலும் சொல்ல முடியாது—

இப்படி திருமதி பண்டாரநாயக்க தமது அறிக்கையில் கூறியிருக்கிறார். (உ-எ)

# எம்.ஜி. ஆரின் கொடும்பாவி எரிக்க
## தி.மு.க.தலைமை பீடம் எதிர்ப்பு

சென்னை, ஜன.22
முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் கொடும்பாவிகளை எரிக்கக் கூடாது என்று திராவிட முன்னேற்றக்கழகத் தலைமைப்பீடம் தனது தொண்டர்களை பணித்துள்ளது.

தி.மு.க தலைமைக்காரியாலய அமைப்பாளர் நீல நாராயணன் இது சம்பந்தமாக மாவட்டக் கிளைகளுக்கு தகவல் அனுப்பியிருக்கிறார்.

பெரியார் மாவட்டத்தில் முதலமைச்சர் இராமச்சந்திரனின் கொடும்பாவியை பகிரங்கமாக எரிக்கப்போவதாக தி.மு.க. தொண்டர்கள் அறிவித்திருந்தனர். அதைத் தொடர்ந்தே தி.மு.க. தலைமைப்பீடம் இத்தடை உத்தரவைப் பிறப்பித்தது.

எவரினதும் கொடும்பாவிகளை எரிக்கக் கூடாதுஎன்பது தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கொள்கை— இபபடி திரு. நீல நாராயணன் தனது பணிப்பில் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

# வீட்டுக்குள் புகுந்து சுட்டதில் 12 பேர் பலி
## தென் ஆபிரிக்காவில் இயக்க மோதல்

கேப்டவுண் ஜன. 22
இனந்தெரியாத நபர்கள் வீடு ஒன்றினுள் புகுந்து நித்திரையில் இருந்த கறுப்பு இனத்தவர்கள் மீது சரமாரியாகச் சுட்டதில் 12 பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் ஏழு பேர் குழந்தைகள். இவர் 3 வயதுக்கும் 5 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

கறுப்பு இனத்தவர் மத்தியில் உள்ள இயக்கங்களுக்கு இடையேயான மோதலின் ஒரு கட்டமாக இச்சம்பவம் நேற்று (புதன்) அதிகாலை இடம் பெற்றதாக பி. பி. சி. வானொலி தெரிவித்தது.

கொலை செய்தவர்கள் சோவியத் தயாரிப்பான ஏ. கே. துப்பாக்கிகளைப் பயன்படுத்தினார்கள் என்று உயிர்தப்பியவர்கள் தெரிவித்தனர். (இ-எ)

# படிப்பறிவு இல்லையா? பாஸ்போட்டும் இல்லை
## பாகிஸ்தானில் புதிய சட்டம்

இஸ்லாமபாத், ஜன 22
படிப்பு வாசனை அற்றவர்கள் பாஸ்போர்ட் பெறமுடியாது.

பாகிஸ்தான் அரசு இச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது.

படிப்பறிவற்ற பாகிஸ்தான் பிரசைகள் மக்கா நகருக்குச் சென்று புனித கடமை செய்ய மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்று புதிய சட்டத்தில் பேலும் கூறப்பட்டுள்ளது.

கல்வி அறிவை அதிகரிக்கும் சட்டத்தின் கீழ் இவ் விதிகள் அமுலுக்கு வந்துள்ளன.

படிப்பு வாசனை அற்றவர்கள் வாகனம் ஓட்டும் லைஸன்ஸ் பெற முடியாது;

துப்பாக்கி லைஸன்ஸ் பெற முடியாது.

அரசு அலுவலகங்களில் உத்தியோகமும் பெற முடியாது.

—இப்படி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக் கையெழுத்திட்டு ஜனவரி முதல் அமுலுக்கு வந்து உள்ள புதிய சட்டம் மேலும் கூறுகிறது.

பாகிஸ்தானில் 26 சதவீதமானவர்களே கல்வி அறிவு பெற்றவர்கள்.

போதிய பாடசாலைகளை அமைக்காமலும் முதியோருக்குக் கல்வி பெறும் வாய்ப்பை அளிக்காமலும் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என கல்விமான்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர். (உ-எ)

# தொலைத் தொடர்பு தொடர்ந்து 'அவுட்'

யாழ்ப்பாணம், ஜன 22
இரண்டாவது தினமான நேற்றும் வெளி மாவட்டங்களுடனான யாழ் மாவட்டத் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

இத் தொலைத் தொடர்பு துண்டிப்புக்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை.

யாழ் பிராந்திய தொலைத் தொடர்பு நிலையத்தினுள் இராணுவம் குடி புகுந்த பின்னர் இடம் பெற்ற முதலாவது தொலைத் தொடர்பு துண்டிப்பு இதுவாகும்.

இராணுவம் நிலையத்தினுள் முகாமிட்ட பின்னர் நிலைய ஊழியர்கள் வேலைக்குச் செல்லாது இருந்து வருகின்றனர் என்பதும் தெரிந்ததே! (உ-எ)

### ★ நடந்து செல்லும் துணை வேந்தர்

யாழ்ப்பாணம், ஜன 22
யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் சு. வித்தியானந்தனின்கார் மூன்று வருடங்களுக்குமுன் எரிக்கப்பட்டது.

இதன் பின் கடந்த சில மாதங்களாக மீண்டும் தனது காரில் பயணம் செய்த துணைவேந்தர் எரிபொருள் கட்டுப்பாட்டால் மினி பஸ்ஸிலும் நடந்தும் தனது கடமையைச் செய்ய வேண்டி உள்ளது.

இதனை அவரே அண்மையில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற ஓர் விழாவில் தெரிவித்தார். (இ-5)

தமிழர் மீது அன்பிருந்தால்
# சிவில் நிர்வாகம் ஏற்படுத்தும் திட்டத்தைக் கைவிடுக
## போராளிகளுக்கு லலித் வேண்டுகோள்

கொழும்பு, ஜன 22
தமிழர்கள் மீது தீவிரவாதிகளுக்கு அன்பு இருக்குமானல், யாழ்ப்பாணத்தில் தனி நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சியைக் கைவிட்டு ஜனாதிபதியின் அரசியல் தீர்வுக்கான யோசனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கேகாலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்.

தீவிரவாதப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மக்கள் ஒன்றுபட வேண்டும்.

தீவிரவாதிகளின் கோட்டையாக இருந்த கிழக்கை நாம் பிடித்து விட்டோம். எல்லா முன்னரங்க நிலைகளிலும் தீவிரவாதிகளைத் தோற்கடிக்கும் திட்டம் படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார். (இ-எ)

### சுவாமி விவேகானந்தர் திதி பூசை

யாழ்ப்பாணம், ஜன 22
சுவாமி விவேகானந்தரின் திதி பூசை இன்று வியாழன்மாலை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரத்தின் ஆதரவில், சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

சுவாமி விவேகானந்தருக்கு அமெரிக்காவில் ஏற்பட்ட சமய உணர்வு என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்டவிரிவுரையாளர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் பேசுவார். (இ-எ)

**பங்குதாரர் (partners) தேவை**

யாழ்ப்பாணத்திலிருந்து 5 மைல் தொலைவில் பிரபல தனியார் நிறுவனமாக இன்று இயங்கிக் கொண்டிருக்கும் அரசாங்கப் பதிவு பெற்ற ''கொம்பனிக்கு'' பங்குதாரர்கள் தேவைப்படுகின்றார்கள். நீர்விநியோகம், கட்டிடம் சம்பந்தப்பட்ட அனுபவம் உள்ளவர்களாக இருந்தால் மேலும் விரும்பத்தக்கது.
தொடர்பு கொள்ளவும்
ROCK ENGINEERS, KOPAY.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 18 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 22 - 01 - 1987.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 18 Second Lane Power house Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 / News. தொலைபேசி. 24805, 22078

### வல்வையில் பொம்மர் வட்டமிட்டது

வல்வெட்டித்துறை, ஜன 22
நேற்றுக் காலை ஒரு மணித்தியாலம் வரை வல்வெட்டித்துறைப் பகுதியில் சியாச்செட்டி சகிதம் பொம்மர் விமானம் வட்டமிட்டது.

நெல்லியடியில் இருந்து பொலிகண்டி வழியாக வல்வெட்டித்துறைக் கடற் பகுதிக்கு இவை வந்தன.

தாக்குதல் சமயத்தில் எப்படி பறந்தனவோ அதே மாதிரி சியாச்செட்டியும் பொம்மர் விமானமும் வட்டமிடத் தொடங்கவே மக்கள் கலக்கம் அடைந்தனர்.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் தாளையடிப் பக்கமாக இவை திரும்பிச் சென்றன. (உ-எ-160)

### போராளி மணிவண்ணன் மரணம்

வல்வெட்டித்துறை, ஜன. 22
நவம்பரில் இடம் பெற்ற மோதலில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி மணிவண்ணன் கடந்த ஞாயிறு மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த செவ்வாய்க்கிழமை புலோலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

பூதவுடல் அவரின் இல்லத்தில் விடுதலைப் புலிகள் இயக்கக் கொடியினால் போர்த்தப்பட்டு அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. (உ-எ-160)

# நடன ஆசிரியர் தேவை பூர்த்தியாகும்
## பயிற்சி வகுப்பு அங்குரார்ப்பண கூட்டத்தில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், ஜன. 22
பாடசாலைகளில் மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவிக்கும் ஆசிரியர் தேவையை இந்த நடன வகுப்பில் பயிலும் மாணவிகள் பூர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இவ்வாறு கூறினார்.

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை நடத்தும் பரத நடனப் பயிற்சி வகுப்பு நேற்று புதன்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில் உரையாற்றுகையிலேயே துணை வேந்தர் இவ்வாறு கூறினார்.

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைத் தலைவரும் யாழ் மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான திரு. வை மு பஞ்சலிங்கம் தமது தலைமையுரையில், 1983 ஆம் ஆண்டுக்குப் பின் யாழ்ப்பாணத்தில் கலைகள் வளர்க்கப்படவில்லை. இவற்றைக் கருத்திற் கொண்டே கலாசாரப் பேரவை ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைச் செயலாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. க. பொ. பாலசிங்கம் உரையாற்றுகையில், நாம் கலையை வளர்த்தால் கலை எம்மை வளர்க்கும். தமிழ் மக்களின் தனித்தன்மை வாய்ந்த கலை, கலாசாரத்தைப் பேணவும் அவற்றைப் பரப்புவதற்கான ஒரு நடன நாட்டியக் கலைஞர் குழுவை அமைக்கும் நோக்கத்துடனுமே நடன வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது — என்றார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள், கலைமாமணி ந. வீரமணி ஐயர் ஆகியோர் ஆசியுரைகள் வழங்கினர். (இ-5)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன 22
கடந்த ஞாயிறு வாழைச்சேனையில் பொலீஸ் கொமாண்டோக்களுடன் நடந்த மோதலில் தமிழீழ விடுதலைப் புலி இயக்கப் போராளி வில்லியம்(ஜீவராசா — வாழைச்சேனை) வீரமரணம் அடைந்தார்.

அவருக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தி அறிக்கை வெளியிட்டனர். (உ-எ)

# ஆறு அமைச்சர்களை எம்.ஜி,ஆர் நீக்குவாரா?

மதுரை, ஜன 21
மேலும் ஆறு அமைச்சர்களை விலக்கும் திட்டம் முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனிடம் உண்டு.

திரு. இராமச்சந்திரன் அண்மையில் மதுரையில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார்.

எப்போது அந்த ஆறு அமைச்சர்களும் பதவி நீக்கம் செய்யப்படுவர் என்பதை வெளியிட விரும்பவில்லை என்று திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

அடுத்த தேர்தலில் தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் என்று மத்திய இணை அமைச்சர் திரு. எம். அருணாசலம் கூறியிருப்பது பற்றி கருத்துக் கேட்டபோது,

''அது திரு. அருணாசலத்தின் ஆசை'' என்று புன்சிரிப்புடன் திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

மதுரை, சென்னை, கோயம்புத்தூர் கோப்பரேஷன் தேர்தல்கள் வெகுவிரைவில் நடக்கும் என்று முதல் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

# காவலூரில் நாடகப் பயிற்சி
## சனிக்கிழமையன்று ஆரம்பம்

ஊர்காவற்றுறை, ஜன 22
ஊர்காவற்றுறை சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமையன்று காலை நாடகக் களப் பயிற்சியும் விரிவுரைகளும் ஆரம்பமாகவுள்ளன.

காவலூர் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சி வகுப்புகளில் நாடகம் சம்பந்தமான செயல் முறைகளை பிரபல நாடக நடிகர் கிறிஸ்டி கனகரத்தினம் வழங்குவார்.

காவலூர் இலக்கிய வட்டத்தின் தலைவரும், அதிபருமான திரு ஆ. சபாரத்தினம் 'இருபதாம் நூற்றாண்டின் நாடகவளர்ச்சி' என்னும் தலைப்பில் ஆரம்ப நாளன்று உரையாற்றுவார். (உ-16)

# மிஸோ தேசிய விடுதலைமுன்னணியின் தேர்தல்சின்னம் 'புலி'!

புதுடில்லி, ஜன. 22
மிஸோரம் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் முதலமைச்சர் லால் டெங்காவின் மிஸோரம் தேசிய விடுதலைமுன்னணி தனது தேர்தல் சின்னமாக 'புலி'யைத் தெரிவு செய்துள்ளது.

'புலி' சின்னத்தையே மிஸோரம் தேசிய விடுதலை முன்னணிக்கு ஒதுக்கும்படி முதலமைச்சர் லால் டெங்கா தேர்தல் ஆணையாளரைக் கோரியிருக்கின்றார்.

மிஸோரம் மாநிலம் அமைக்கும் போராட்டத்தை நடத்தி வந்த போராளிக் குழுவான தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் லால் டெங்கா.

பிரதமர் காந்தியுடன் செய்துகொண்ட உடன்பாடு ஒன்றைத் தொடர்ந்து திரு. லால் டெங்கா முதலமைச்சரானார்.

மாநிலத்தின் முதலாவது சட்டசபைத் தேர்தல் அடுத்தமாதம் நடைபெறவிருக்கின்றது.

இதனிடையில் மிஸோரம் மாநில சட்டசபையின் ஒருநாள் கூட்டம் நேற்று நடந்தது.

மிஸோரம் உடன்படிக்கை அமுல்நடத்தப்படும் என்று முதலமைச்சர் லால் டெங்கா அறிவித்தார். (இ-எ)

# சிங்களத் தேர்ச்சி: விதிவிலக்கு அளிக்குக!
## ஜனாதிபதியிடம் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன 22
வடக்கு, கிழக்குமாகாணங்களில் கடமை புரியும் விசேட சேவை அலுவலர்களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சியில் இருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றினை, விசேட சேவை அலுவலர்கள் சங்கம், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் 182 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், விசேடமாக நியமிக்கப்பட்டு, தமிழ் பேசும் மாவட்டங்களில் கடமை புரியும் அரச உத்தியோகத்தர்கள் சிங்கள மொழித் தேர்ச்சியில் தரம் ஒன்றில் சித்தியடைந்தால் போதுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதேவேளை விசேட சேவை அலுவலர்களுக்கு திட்டமிடல் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில், இந்த அலுவலர்கள் சிங்கள மொழித் தேர்ச்சியில் தரம் மூன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (உ-31)

### காயம்

யாழ்ப்பாணம், ஜன 22
காட்டுக்குள் விறகு வெட்டிய வயோதிபர் மீது ஊர்காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கையில் பலத்த காயம் ஏற்பட்டு வயோதிபர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நெடுங்கேணியைச் சேர்ந்த கந்தப்பு யோண்சிறி (72 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

ஊர்காவல் படையினரின் சூட்டுக் காயத்துடன் காட்டுக்குள் மறைந்திருந்த இவ் வயோதிபர் இரண்டு நாட்களுக்குப் பின்னர் தான் வெளியே வந்தாராம். (இ-10)

# ஈராக் பட்டினம் ஈரானிடம் வீழ்ச்சி

தெஹ்ரான், ஜன 22
ஈராக்கின் தென் துறைமுகமான பஸ்ராவில் உள்ள பட்டினம் ஒன்றை ஈரான் நேற்றுக் கைப்பற்றியது.

சுமார் 1500 ஈராக்கிய துருப்புக்கள் அப்போது கொல்லப்பட்டனர்.

ஈராக்கிய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இதனிடையில் ஈராக் யுத்த விமானங்கள் ஈரானின் எட்டு நகரங்களின் மேல் குண்டு வீச்சை நடத்தின.

குண்டு வீச்சுக்கு இலக்கான ஈரான் நகரங்களில் வாழும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் -- இப்படி ஈரான் இந்தியத் தூதரகம் அறிவித்தது.

### கண்காட்சி

நெடுங்கேணி, ஜன 22
நெடுங்கேணி கிராமோதய சபையினால் குளவிசுட்டான் கிராமத்தில் பனம் பொருள் அபிவிருத்திக் கண்காட்சி மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி செல்வி ந. சந்திராவதியின் தலைமையில் நடைபெற்றது.

நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவர் திரு. ரி. எம். பீற்றர் பொன்கலன்ட் மங்கள தீபமேற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. பே. பதமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (உ-108)

### ஊர்வலம்

யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்பு ஊழியர்கள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

எரிபொருள் தடை காரணமாக யாழ் மாநகரசபையின் வாகனங்கள் ஓட முடியாத நிலையில் உள்ளன.

இதன் காரணமாக பொதுமக்கள் வீதிகளிலும் வீடுகளிலும் குப்பைகளைத் தேக்காமல் அவற்றை எரிக்க வேண்டும் அல்லது குழிவெட்டிப் புதைக்க வேண்டும்.

இவ்வாறு வீதி எங்கும் தெரிவித்தபடி இவர்கள் ஊர்வலம் சென்றனர்.

யாழ். மாநகர சபையின் முக்கிய வீதிகள் எங்கும் இவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

## வயிறு பிளந்த...
(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நின்ற ஒருவர் காயமடைந்த நிலையில் கீழே விழுந்தார்.

நான் அவரை ஓடிச் சென்று தூக்கிக் கொண்டு வருகையில் அடுத்த ஷெல் மீண்டும் அதே இடத்தில் விழுந்தது.

இதனால் அந்த இடத்தில் நின்ற வடிவேலு பதி என்ற மரக்கறி வியாபாரி வயிறு பிளந்த நிலையில் மரணமானார்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

## அரசாங்கத்..
(1ம் பக்கத்தொடர்ச்சி)

வர், களனிப் பல்கலைக்கழகத்தின் லத்தீன். கிரேக்கம் ஆகிய மொழிகளில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.

எதிரிகளான மூன்று தமிழரில் ஒருவர் ஈ. பி. ஆர் எல் எப். இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்.

எதிரிகள் அனைவரும் தற்சமயம் காவலில் உள்ளனர். (உ-எ)

## அரச..
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுங்கள்.

அதன்பின் சகலலொறிகளும் தாமதமின்றிப் போக்குவரத்து நடத்த முடியும் என்றார்.

சுமார் இரண்டு மணி நேரமாக இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. (இ-10)

## போராளி..
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டுக் கொல்லப்பட்டார்

மன்னாரில் உள்ள எமக்கும் போராளிகளை பிடித்துத் தருமாறு அரசு உத்தரவிட்டது

எனினும் நாம் போராளிகளுக்கு எதிராக எந்த வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org